# IN THE COURT OF  ADDITIONAL DISTRICT COURT, SRIVILLIPUTTUR.

OS. 72/2015

நாள். 28.03.2023

*பி.வா.சா.1*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | அன்னபூரணி | தாலுகா | .. | சிவகாசி |
| க.பெ | .. | பாண்டிமுனி (எ) பாண்டியன் | வயது | .. | 62 |
| கிராமம் | .. | சிவகாசி | தொழில் | .. | வீட்டுக்குடித்தனம் |

**Solemnly affirmed  by V.Paulraj , Gr.I Bench Clerk of this Court  in  accordance with the provisions of  Act  X of 1872**

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

1. 21.10.2008ம் தேதியிட்ட சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்பின் புகைப்பட நகல். **(பி.வா.சா.ஆ.5)**. (வாதி தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணம் புகைப்பட நகல் என்பதால் ஆட்சேபணை செய்கிறார். உச்சநீதிமன்றம் விசாரணை நீதிமன்றங்களுக்கு, வழக்கு விசாரணையில் சாட்சியம் பதிவு செய்யும்போதும் ஆவணங்களை குறியீடு செய்யும்போது ஏதேனும் ஆட்சேபணை செய்யப்பட்டால் அந்த ஆட்சேபணையை பதிவு செய்து கொண்டு தீர்ப்பின் இறுதியில் அது குறித்து முடிவு செய்ய வேண்டும் என்று Bipin Shanthilal Panchlal Vs State of Gujarat and another, 2001 (3) SCC page 1. வழக்கில் வழங்கிய வழிகாட்டுதலின் அடிப்படையில் மேற்படி சாட்சியம் மற்றும் ஆவணங்கள் குறித்து வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணையை பதிவுசெய்து, மேற்படி ஆவணங்களின் நம்பகத்தன்மை மற்றும் ஏற்புத்தன்மை வழக்கின் தீர்ப்பில் முடிவு செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது.)
2. 30.04.2013ம் தேதியிட்ட இடைக்கால மனு எண்.40-2004ல் பிறப்பிக்கப்பட்ட இறுதி நிலை தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல். **(பி.வா.சா.ஆ.6)**.
3. 30.06.1995ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் சார்பதிவாளர் நகல். **(பி.வா.சா.ஆ.7)**.

**(ஒம்/) கா.பூரண ஜெய ஆனந்த்,**
**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, (FAC)**
**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**
**திருவில்லிபுத்தூர்.**

4. 08.04.1995ம் தேதியிட்ட பாண்டிமுனி என்பவரின் இறப்பு சான்றிதழ் புகைப்பட நகல். **(பி.வா.சா.ஆ.8)**.அசல் ஆவணத்துடன் ஒப்பீடு செய்யப்பட்டு புகைப்பட நகல் குறியீடு செய்யப்படுகிறது.

5. வீட்டுத்தீர்வை அசல். **(பி.வா.சா.ஆ.9)**.

6. வீட்டுத்தீர்வை அசல். **(பி.வா.சா.ஆ.10)**.

**<u>8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இல்லை.

**<u>12ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. பி தபசில் சொத்து எனது அத்தை பெயரில் உள்ளது. அந்த சொத்து காலியிடமாக இருந்தது.

2. அந்த சொத்தையும், பிற சொத்துக்களையும், பிரிக்க சொல்லி என் கணவரின் சகோதரர் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அதில் 3 பாகமாக பிரிக்கச் சொல்லி உத்தரவு வந்தது என்றால் சரிதான். அதில் எங்களது பாகத்தை பிரிக்க மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதில் நீதிமன்ற ஆணையர் எங்களது பாகத்தை பிரித்துக்கொடுத்தார் என்றால் சரிதான்.

3. அதன் பிறகு என்னுடைய பாகத்தை 12ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்தோம் என்றால் சரிதான். அந்த இடத்தில் தான் 12ம் பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான்.

4. மற்றொரு பாகத்தை சிவலிங்கம் வாரிசுகள் 13ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

5. இந்த வழக்கில் 1ம் பிரதிவாதியின் பாகம் தற்போதும் பிரிக்கப்பட்டு உள்ளது என்றால் சரிதான்.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.**

**(ஒம்/) கா.பூரண ஜெய ஆனந்த்,**
**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,(FAC)**
**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**
**திருவில்லிபுத்தூர்.**